LIBRARY
23 AUG 2013
EASTERN UNIVERSITY, SRI LANKA

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## பொதுக் கல்விமாணித் தேர்வு (வெளிவாரி) – 2010 / 2011
## (ஜூலை 2013)

**EDU 101 கல்வியியல் அடிப்படை எண்ணக்கருக்களும் மனிதவள விருத்தியும்**

03 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடைதருக.

---

1. அ. அறிஞர்களின் கல்வி தொடர்பான வரைவிலக்கணங்களை முன்வைத்து அவற்றின் உதவியுடன் சுயமான வரைவிலக்கணம் ஒன்றை முன்வைக்குக?
(10 புள்ளிகள்)

ஆ. கல்வியின் பொதுவான நோக்கங்களை முன்வைத்து வகைப்படுத்தி விளக்குக?
(10 புள்ளிகள்)

2. அ. ஜீன் ஜேக்ஸ் ரூசோ முன்வைத்த இயற்கைவாதக் கல்விக் கருத்துக்கள் தற்காலக் கல்வி உலகிற்கு எந்தளவிற்குப் பொருத்தமானது என்பதை ஆராய்க?
(07 புள்ளிகள்)

ஆ. பயன்பாட்டு வாதக் கல்விக் கருத்துக்களை விளக்கி அவை இன்று உலகரீதியாகப் பெற்றுள்ள முக்கியத்துவத்தினை உதாரணங்களின் உதவியுடன் விளக்குக?
(07 புள்ளிகள்)

இ. இலட்சியவாதக் கருத்துக்களை முன்வைத்து விளக்குக.
(06 புள்ளிகள்)

3. அ. முறைசார் கல்வி, முறைசாராக் கல்வி, முறைமையிற் கல்வி ஆகியவற்றிற்கிடையேயுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை விளக்குக?
(12 புள்ளிகள்)

ஆ. தொலைக்கல்வி என்றால் என்ன என்பதனை விளக்கி இலங்கையிற் காணப்படும் தொலைக்கல்விக்கான உதாரணங்களைச் சுட்டிக்காட்டுக?
(08 புள்ளிகள்)

4. அ. முன்பள்ளிக் கல்விச் செயற்பாடுகள் சிறப்பாக இடம்பெறுவதற்குத் தடையாக அமையும் காரணிகளை முன்வைத்து விளக்குக?
(07 புள்ளிகள்)

ஆ. முன்பள்ளிக் கல்விச் செயற்பாடுகள் பிள்ளைகளிடத்தே ஏற்படுத்தும் மாற்றங்களைக் குறிப்பிட்டு விளக்குக?
(07 புள்ளிகள்)

இ. இலங்கையின் முன்பள்ளிக் கல்விச் செயற்பாடுகளிற் காணப்படும் நடைமுறைப் பிரச்சினைகளை விளக்குக?

(06 புள்ளிகள்)

5. அ. ஆசிரியர் தொழில் ஒரு வாண்மைத் தொழிலாக நிலைப்பதில் ஏற்படும் தடைகளையும் சவால்களையும் குறிப்பிடுக?

(10 புள்ளிகள்)

ஆ. ஆசிரியர்கள் கொண்டிருக்க வேண்டிய திறன்களைக் குறிப்பிட்டு அவற்றின் முக்கியத்துவங்களை விளக்குக?

(10 புள்ளிகள்)

6. அ. 'பாடசாலையும் சமூகமும் ஒன்றில் ஒன்று தங்கியுள்ளது' இக் கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க?

(07 புள்ளிகள்)

ஆ. 'கல்வி தனியாள் விருத்திக்கு வித்திடுகின்றது' இக் கூற்றின் பொருத்தப்பாட்டை ஆராய்க?

(07 புள்ளிகள்)

இ. இலங்கையின் கல்விக் கொள்கையில் உயர்கல்வியின் தற்காலப் போக்கினை ஆராய்க?

(06 புள்ளிகள்)

7. அ. இலவசக் கல்வி முறையின் மூலம் மாணவர்கள் பெற்றுள்ள கல்வி உரிமைகளைக் குறிப்பிட்டு உதாரணங்களின் உதவியுடன் விளக்குக?

(10 புள்ளிகள்)

ஆ. 'முன்பள்ளிக் கல்வியும் இலவசக்கல்விச் செயற்பாடுகளும்' இக்கூற்றினை தற்கால நடைமுறையினை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க?

(10 புள்ளிகள்)

8. அ. இலங்கையின் கல்வி முறையிற் காணப்படும் பொருளாதாரம், அரசியல், சமூக ரீதியான சமத்துவம் இன்மையை ஆராய்க.

(10 புள்ளிகள்)

ஆ. 'சிறுவர் துஸ்ப்பிரயோகமும் ஆசிரியர்களும்' இக்கூற்றினை நடைமுறை உதாரணங்களைக் கொண்டு விளக்குக.

(10 புள்ளிகள்)